செ.வெ.எண்: 42 நாள்: 20.08.2021

## பத்திரிகைசெய்தி

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக்கழகம் (தாட்கோவின்) மூலமாக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ / மாணவியர்க்கு குறுகியகால (ஒன்றுமுதல் ஆறு மாதம் வரையிலான ) திறன் மேம்பாட்டு பயிற்சிகள் கட்டணமில்லாமல் அளிக்கப்படுகிறது.

மாணாக்கர்களின் தகுதிகேற்ப ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின நல மாணவ/ மாணவியர்கள் தங்களுக்கு தேவைப்படும் தொழில் நுட்பபயிற்சியினை மேற்கொள்ள, தாட்கோவின் http://training.tahdco.com என்ற இணையதளத்தின் வழியே பதிவேற்றம் செய்து தாங்கள் விரும்பும் பயிற்சியினை மேற்கொண்டு இத்திட்டத்தின் மூலம் கட்டணமின்றி பயன்படுத்திக் கொள்ளலாம். மேலும் மாணவ / மாணவியர்களுக்கு போக்குவரத்து படிகள் வழங்கப்படும். இப்பயிற்சியின் முடிவில் தேர்ச்சி பெற்றமாணவர்களுக்குளுஊஏவு / SSC சான்றிதழ்கள் வழங்கப்பட்டு பல்வேறு தனியார் நிறுவனங்களில் வேலைவாய்ப்பிற்கு வழிவகை செய்யப்படும்.

திறன் மேம்பாட்டு பயிற்சி முடித்து சான்றுபெற்ற பயிற்சியாளர்கள் மாவட்ட மேலாளரிடம் தாங்கள் பயின்ற பயிற்சிக்கு தொடர்பான தொழில் தொடங்கிட, http://tahdco.application.com தாட்கோ இணையதளத்தில் விண்ணப்பத்தினை பதிவுசெய்து தொழில் முனைவோர் திட்டம் (EDP) மற்றும் இளைஞர்களுக்கான சுயவேலைவாய்ப்பு (SEPY) திட்டத்தின் கீழ் பயன பெறலாம். அரசு மானியத்துடன் கூடிய வங்கிகடன் வழங்க ஆவண செய்யப்படும் .எனவே, நாகப்பட்டினம் மாவட்டத்தை சார்ந்த ஆதிதிராவிட / பழங்குடியினர் மாணவ / மாணவியர்கள் இந்த வாய்ப்பினை பயன்படுத்திக் கொள்ளுமாறு நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் .அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**